
பக்கங்கள் 18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆனி 08 ஞாயிற்றுக்கிழமை 22.06.2025 | அதிர்வு 322

## திருமலையில் விபத்து! இருவர் பரிதாபச் சாவு!!



திருகோணமலை – கண்டி பிரதான வீதி 98 ஆம் கட்டைச் சந்தியை அண்மித்த பகுதியில் இடம்பெற்ற 03



# ‘மொட்டு’ ஆட்சி மீண்டும் மலரும்

## இப்படி நாமல் எம்.பி. நம்பிக்கை

“நாம் மீண்டும் மக்கள் ஆதரவு அலையுடன் எழுச்சி பெறுவோம். மீண்டும் மொட்டுக் கட்சியின் ஆட்சி மலரும்.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தோல்வியடைந்துவிட்டது என்றோ - அது மீண்டும் எழுச்சி பெறாது என்றோ அநுர அரசு தப்புக்கணக்குப் போடக்கூடாது. நாம் மீண்டும் மக்கள் ஆதரவு அலையுடன் எழுச்சி பெறுவோம். மீண்டும் மொட்டுக் கட்சியின் ஆட்சி மலரும். 03



### சுற்றுலாப் பயணிகளை ஏற்றி வந்த பஸ்

## பதுளையில் கோர விபத்து! மூவர் பலி; 32 பேர் காயம்!!

பதுளை, துன்ஹிந்த பகுதியில் சுற்றுலா பஸ் ஒன்று நேற்று விபத்துக்குள்ளானதில் மூவர் பலியாகியுள்ளனர். அத்துடன் 32 பேர் காயமடைந்துள்ளனர்.

அனுராதபுரம், தம்புதுதேகம பிரதேசத்தில் இருந்து பதுளைப் பகுதிக்குச் சுற்றுலாப் பயணிகளை ஏற்றி வந்த தனியார் பஸ் நேற்று மாலை பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹியங்கனை வீதி, 4ஆம் கட்டைப் பகுதியில் வீதியில் தடம் புரண்டு 03




மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணையாளர் வோல்கர் டுர்க் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு நாளை இலங்கை வர இருக்கையில் அவரது நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் ஒழுங்குகளைக் கவனிப்பதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட அதிகாரி ரோர்ரி முன்கோவன் நேற்று இலங்கை வந்து சேர்ந்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையில் மேற்கொள்ளும் நிகழ்ச்சி நிரல்கள் பற்றிய ஒழுங்குகள் மற்றும் விடயங்களை முன்னெடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் அவர், இன்று காலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனை 03

## கிளிநொச்சியில் நேற்று இரவு கோர விபத்து

# எரிவாயு சிலிண்டர் வாகனத்துடன் மோ. சைக்கிள் மோதி ஒருவர் பலி!





கிளிநொச்சியில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, 155 ஆம் கட்டைப் பகுதியில் நேற்று இரவு எரிவாயு சிலிண்டர் ஏற்றிக்கொண்டு வந்த வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் இருவர் பயணித்த நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றைய நபர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, விநாயகபுரத்தைச் சேர்ந்த 33 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இஸ்ரேலிலிருந்து வெளியேறும் இலங்கையர்கள் செல்லுபடியாகும் விசாவை வைத்திருங்கள்



இஸ்ரேலில் இருந்து எகிப்து வழியாக இலங்கைக்குப் பயணிக்கவுள்ள இலங்கையர்கள் செல்லுபடியாகும் இஸ்ரேலிய விசாவை வைத்திருப்பது கட்டாயம் என இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

நிலவும் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் உள்ள டெல் அவிவ் விமான நிலையம் மூடப்பட்டுள்ளதால், இஸ்ரேலை விட்டு வெளியேற விரும்பும் இலங்கையர்கள் தூதரகத்தைத் தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களைப் பெற்றதன் பின்னர், எகிப்து வழியாக வெளியேற முடியும் என, இஸ்ரேலிய தூதரகம் முன்னர் அறிவித்திருந்தது.

நேற்று, எகிப்திய எல்லையைக் கடந்து கெய்ரோ விமான நிலையத்திலிருந்து இலங்கைக்குப் புறப்பட்ட நான்கு இலங்கையர்களில் ஒருவருக்கு இஸ்ரேலிய விசா இல்லாத காரணத்தினால், எகிப்திய அதிகாரிகளால் அவர் நீண்ட விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

பின்னர், இது தொடர்பில் எகிப்துக்கான இலங்கைத் தூதுவருக்குத் தகவல் தெரிவித்த பின்னர், எகிப்திய எல்லை மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொள்ள முடிந்ததாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார்.

அவசரநிலையில் கூட, செல்லுபடியாகும் இஸ்ரேலிய விசா இல்லாத அல்லது காலாவதியான விசா ஊடாக வெளிநாட்டினர் எகிப்துக்குள் நுழைய முடியாது என்றும், இவ்வாறு பயணிக்க முயற்சிப்பது நீண்ட விசாரணைகளுக்கும், கைதுகளுக்கும் காரணமாக அமையலாம் என்றும் இஸ்ரேலிய தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்படி, இஸ்ரேலிய விசாக்கள் இல்லாத அல்லது விசாக்கள் காலாவதியான இலங்கையர்கள் எகிப்து வழியாக இலங்கைக்கு அனுப்பப்பட மாட்டார்கள்.

அதேநேரம், செல்லுபடியாகும் இஸ்ரேலிய விசாக்கள் இல்லாதவர்கள் இலங்கைக்குப் பயணிக்க டெல் அவிவ் சர்வதேச விமான நிலையம் திறக்கும் வரை காத்திருக்க வேண்டியிருக்கும் எனவும் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

# வாகன இலக்கத்தகடுகளை அச்சிடும் புதிய நிறுவனம்

வாகன இலக்கத்தகடுகளை அச்சிடும் பணிகள் ஒரு மாத காலத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையால், சுமார் 15 ஆயிரம் வாகனங்களுக்கு வாகன இலக்கத்தகடுகளை அச்சிடுவதற்கான தேவை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் கமல் அமரசிங்க இதனை தெரிவித்துள்ளார்.



வாகன இலக்கத்தகடுகளை அச்சிடும் நிறுவனத்துக்கு பணம் செலுத்துவதில் ஏற்பட்ட தாமதத்தால் கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி முதல் அச்சிடும் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

அத்துடன், வாகன இலக்கத்தகடுகளை அச்சிடுவதற்கு புதிய நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை 15 நிறுவனங்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.



# யாசகம் பெற்றுவந்த 21 சிறுவர்கள் மீட்பு

யாசகம் பெற்ற மற்றும் வீதியோரங்களில் பொருள் விற்பனையில் ஈடுபட்ட 21 சிறுவர்கள் தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகார சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு தற்போது உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பற்ற முறையில் யாசகம் பெறுதல் மற்றும் பொருள்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபடும் சிறுவர்களைக் கண்டறிவதற்கான விசேட வேலைத்திட்டமொன்று கடந்த சில தினங்களாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக தடுப்புப் பணியகம் மற்றும் தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகாரசபையால் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அதன்படி, கொழும்பு, நுகேகொடை, கம்பஹா, பாணந்துறை, களனி, நீர்கொழும்பு, கல்கிஸ்ஸை, களுத்துறை, தங்காலை, அனுராதபுரம், கண்டி, குருநாகல், சிலாபம், இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

காலை விருந்து உணவோடு சந்திக்கிறார். அப்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரை தமிழர் பிரதிநிதிகள் சந்திப்பது தொடர்பான நிகழ்ச்சி ஒழுங்குகள் மற்றும் அவரின் யாழ் விஜய நிகழ்ச்சிகள் குறித்து தீர்மானிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் மனித உரிமைகள் ஆணையாளர் தமது கொழும்பு விஜயத்தின் போது நாளை மறுதினம் மாலை 4:30 மணிக்கு நாடாளுமன்றக் குழு அறையில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களை ஒன்றாகச் சந்தித்துப் பேச இருக்கிறார் என்று செய்தி வெளியாகியுள்ளது.

இது குறித்து நாடாளுமன்ற செயலாளநாயகம் கட்சிகளின் தலைவர்களுக்கு அறிவித்திருக்கிறார். இந்த அறிவிப்பு எதிர்க்கட்சி வட்டாரங்களில் குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

வழமையாக இத்தகைய சர்வதேசப் பிரமுகர்கள், பிற நாட்டுத் தலைவர்கள் நாட்டுக்கு வருகின்ற போது ஒரு புறம் அரசு தலைவர்களை அவர்கள் சந்திக்கும் அதே சமயத்தில், மறுபுறம் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிரணித் தரப்புகளின் பிற முக்கிய த்லைவர்களையும் அவர்கள் தனியாகச் சந்திப்பர்.

அத்தகைய தனிச் சந்திப்புகளை தவிர்க்க வைக்கும் நோக்கத்தோடு, இவ்வாறு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஒன்றாகச் சந்திப்பார் என்ற திட்டம் வகுக்கப்படுகின்றதா என்று கேள்வி எதிர்க்கட்சி வட்டாரங்களில் எழும்பியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு குறித்தோ ஏனைய எதிர்க்கட்சி தலைவர்களுடன் ஆணையாளர் தனித்துச் சந்தித்துப் பேசுவது குறித்தோ இன்னும் தெளிவான தகவல்கள் வெளியாகவில்லை. அது பற்றிய நிலைவரம் இன்று தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.

ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் எதிர்க்கட்சிகளின் தலைவர்களைத் தனித்துச் சந்தித்து பேசுவதை தவிர்க்கச் செய்யும் திட்டமிட்ட நகர்வை அரசு முன்னெடுக்கின்றதா என்ற கேள்வி எதிர்க்கட்சித் தலைவர்கள் மட்டத்தில் எழுந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

எது, எப்படி என்றாலும் தமது இந்த இலங்கை விஜயத்தின் பின்னர் வரும் செப்டம்பர் மாதத்தில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூடும் போது அதில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பாகச் சமர்ப்பிக்க போகின்ற அறிக்கை மிக முக்கியமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் தடவை ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான புதிய பிரேரணை கொண்டுவரப்பட இருக்கின்றது. அதைத் தயாரிப்பதில் இணைத்தலைமை நாடுகளான ஜேர்மனி, கனடா, பிரிட்டன் ஆகியவை மும்முரமாக உள்ளன என்று தெரிகின்றது.

வலிமையான ஈழத் தமிழர்களின் புலம்பெயர் மக்கள் கூட்டத்தை கொண்டுள்ள இந்த மூன்று நாடுகளிலும் ஈழத் தமிழர்கள் அந்தந்த நாட்டு அரசுகளில் கணிசமான செல்வாக்கை செலுத்துவரும் நிலையில், இம்முறை இலங்கைக்கு எதிரான பிரேரணை கடந்த தடவை நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை விட சூடாக இருக்கும் என்று சில வட்டாரங்கள் கணிப்பிடுகின்றன. அதற்கு ஏற்றாற் போல இப்போதைய இலங்கை விஜயத்தின் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஜெனிவாவில் வரும் செப்டம்பரில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கும் இலங்கை தொடர்பான அறிக்கை அமையும் என்றும் அந்த வட்டாரங்கள் கருத்து வெளியிட்டு இருக்கின்றன.

## திருமலையில்...

வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மூதூர் வலயக் கல்வி அலுவலகத்துக்குச் சொந்தமான கப் ரக வாகனத்துடன் குறித்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் மோதுண்டதில் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த இருவரும் 48, 50 வயதுகளையுடையவர்களாவர்.

விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய கப் ரக வாகனத்தின் சாரதியைத் தம்பலகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்த இருவரினதும் சடலங்களும் தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பதுளையில்...

விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது பஸ்ஸில் பயணித்த 35 பேர் காயங்களுக்குள்ளாகி பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர்களில் மூவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குப் பொறுப்பான வைத்தியர் பாலித்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த விபத்து குறித்து பதுளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பஸ்ஸை செலுத்திய சாரதியால் பஸ்ஸின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமையே விபத்து ஏற்படக் காரணமாக இருக்கலாம் எனப் பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளின் பின்னர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## 'மொட்டு'...

நாம் ஆட்சிக்கு வந்தவுடன் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றங்களை ஏற்படுத்துவோம். இந்தப் போலி அரசு போல் மக்களை ஏமாற்றி ஆட்சி நடத்தமாட்டோம். பழிவாங்கல் நடவடிக்கையில் நாம் ஈடுபடவும் மாட்டோம்.

ராஜபக்ஷ அரசில் இருந்த அமைச்சர்களை ஒவ்வொருவராகச் சிறையில் அடைப்பதில் அநுர அரசு குறியாக வுள்ளது. ஏன் இந்தப் பழிவாங்கல்?

போலி வேடம் போட்டு ஆட்சிக்கு வந்த இந்த அரசை மக்கள் விரைவில் விரட்டியடிப்பார்கள். மக்கள் ஆணை மீண்டும் எமக்குக் கிடைக்கும்." – என்றார்.



# புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஆதரவு

தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்து மேற்கொண்ட புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் தங்கள் முழு ஆதரவைத் தெரிவித்துள்ளார்கள்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் பிரதமர் ஹறிணி அமரசூரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கும், இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் தகாஃபுமி கடோனோ மற்றும் அதன் ஏனைய பிரதிநிதிகளுக்கு இடையே நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்தக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன என பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த கலந்துரையாடலின்போது, புதிய கல்வி சீர்திருத்தங்களுக்காக ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பாடசாலை கல்வியில் எதிர்வரும் ஆண்டிற்கான புதிய மறுசீரமைப்பை செயல்படுத்துவது, சம்பந்தப்பட்ட சவால்கள் உள்ளிட்டவற்றை பிரதமர், ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகளுக்கு விளக்கியுள்ளார்.

இந்த நிலையில், புதிய கல்வி சீர்திருத்தங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கி திருப்தி அடைந்துள்ளதாக பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.









# தேயிலை உற்பத்தி 2.9 வீதம் அதிகரிப்பு

நாட்டின் தேயிலை உற்பத்தியானது கடந்த மாதம் 2.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது 25.37 மில்லியன் கிலோகிராமாகப் பதிவாகியுள்ளது.

இந்த வருடத்தின் முதல் 5 மாதங்களில் மாத்திரம் தேயிலை உற்பத்தியானது 113. 96 மில்லியன் கிலோகிராமாக பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த வருடம் இந்த காலப் பகுதியுடன் ஒப்பிடும் போது தேயிலையின் உற்பத்தி 104.80 மில்லியன் கிலோகிராமாக பதிவாகியிருந்தது.

நாட்டின் மத்திய மாகாணத்திலேயே தேயிலை உற்பத்தி அதிகரிப்பைப் பதிவு செய்திருந்ததாக தெரியவந்துள்ளது.




# வடக்கு மாணவர்கள் கௌரவிக்கப்படுவர்!

கடந்த 2023 - 2024 ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் மாவட்ட ரீதியாக உயர் திறமைகளை வெளிப்படுத்திய சிறந்த மாணவர்களைக் கௌரவிக்கும் வேலைத்திட்டம் ஜனாதிபதி நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, இதன் ஆரம்ப நிகழ்வு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சையில் ஒவ்வொரு பாடப்பிரிவிலும், மாவட்டத்தில் மட்டத்தில் சிறந்த பெபேறுகளைப்பெற்ற 60 மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு, நிதிப் புலமைப்பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

2023 ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இதன்போது கௌரவிக்கப்படவுள்ளனர்.



# பதவி துறந்த எம்.பி. நிதி அமைச்சின் செயலராகின்றார்?

பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இது தொடர்பான பதவி விலகல் கடிதம் தம்மிடம் கையளிதிருப்பதாகப் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகச் சபைக்கு வந்த ஹர்ஷன சூரியப்பெரும, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சராகப் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நிதி அமைச்சின் செயலாளராகப் பதவி வகித்த மஹிந்த சிறிவர்தன சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார். எனவே, நிதி அமைச்சின் செயலாளர் பதவிக்கு ஹர்ஷன சூரியப்பெரும நியமிக்கப்படவுள்ளார். அதற்காகவே எம்.பி. பதவியைத் துறந்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

# ஐஸ் போதைப்பொருளுடன் பெண் உட்பட இருவர் கைது!



யாழ்ப்பாணத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் பெண் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரையும் இளைஞர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி இருவரிடமும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்களிடம் இருந்து 440 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தையிட்டிக்குத் தீர்வு!

தையிட்டி விகாரைக்காகக் கைப்பற்றப்பட்ட காணிக்கு பதிலாக 'மாற்றுக் காணி அல்லது இழப்பீடு' வழங்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக ஒரு செய்தி வெளியாகியிருக்கின்றது.

வடக்கில் இராணுவ ஆதரவுடன் விகாரை அமைக்கப்பட்ட பிரதேசத்தில் தமிழர்கள் உரிமை கோரும் காணிகளுக்கு மாற்றுக் காணி அல்லது இழப்பீடு வழங்க தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

'தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்காக' அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகம் (ONUR), சர்ச்சைக்குரிய விகாரை குறித்த அறிக்கையை நீதி அமைச்சரிடம் ஒப்படைத்ததை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுளது.

இப்படி ஒரு முடிவை அரசாங்கம் ஒரு தலைப்பட்சமாக எடுத்து, அறிவித்து, சம்பந்தப்பட்ட மக்கள் மீது அந்த முடிவை திணிக்க முயலுமானால் அது நிலைமையை இன்னும் மோசமாக்கும் என்பது தெளிவு.

தமிழ் மக்களின் பூர்வீகத் தாயக நிலத்தை உயர் பாதுகாப்பு வலயம் என்று ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு, அதற்குள் தம் இஷ்டப்படி விகாரையை கட்டிய இராணுவத்தின் செயல் எத்தகைய அடாவடித்தனமோ அதைவிட மோசமான அடாவடித்தனம் அந்த காணிகளை மீளக் கையளிக்க மாட்டோம் என்று ஒரு தலைப்பட்சமாகத் தெரிவித்து, அதற்கு மாற்றாக காணி அல்லது இழப்பீடு வழங்குவோம் என்ற திட்டத்தை அந்த மக்கள் மீது அரசு வலிந்து திணிப்பதாகும்.

கட்டப்பட்ட பௌத்த விகாரை ஒன்றை, உயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பிரதேசத்தில் பேணிப் பாதுகாக்க முடியாமல் உடைப்பது என்பது தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கு நெருக்கடியான விடயமாக இருக்கலாம். ஆனால் சட்ட ரீதியாக பார்த்தால் அதுதான் ஒரே தெரிவு. ஆகவே அந்தத் தெரிவில் இருந்து விலகி மாற்றும் முடிவு எடுப்பதனால், அது சட்டரீதியான ஒழுங்குக்கு மாறான விவகாரமாக அமையும் என்பதும் தெளிவு.

இத்தகைய விடயத்தை செய்வதானால் அதிலே திமிர்த்தனம் அரசிடம் இருக்கப்படாது. பவ்யமே காட்டப்பட வேண்டும்.

ஆனால் விகாரை அமைப்பு விடயத்தில் பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகள் சண்டித்தனப் பாணியில் - அடாவடித்தனத்தில் - திமிர்ப் போக்கில் அணுகும் போது, விவகாரத்தில் தமிழர் தரப்பு விட்டுக் கொடுத்து நடக்கும் என்று எதிர்பார்ப்பது அர்த்தமற்றது.

சரியோ, பிழையோ ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் - தனியாரின் - காணியில் அடாவடித்தனமாக அத்துமீறி விகாரையைக் கட்டியது பெருந்தவறு. இத்தகைய தவறிழைத்த மனப்பான்மையுடன்தான் இவ்விடயத்தைக் கையாள அரசு முன் வர வேண்டும். அதை விடுத்து திமிர்த்தன அணுகுமுறையில் முடிவை எடுத்து, அதனை தமிழ் மக்கள் மீது திணிக்கும் மேலாண்மை போக்கோடு அணுகினால், இதற்கு - இந்தப் பிரச்சினைக்கு - நீதியானதும், நியாயமானதும், சுமூகமானதும், எல்லா தரப்பினரும் ஏற்கக் கூடியதுமான தீர்வு கிட்டுவதற்கு வாய்ப்பில்லை என்பதை அரசுத் தலைமை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தக் காணி என்று அல்ல, பாதுகாப்பு உயர்வலயம் என்று கைப்பற்றிய பிரதேசங்களின் பல காணிகளில் இதே அடாவடித்தனத்தைதான் இராணுவமும் முன்னைய அரசுகளும் செய்துள்ளன. கிரிமலையை அண்டி ஜனாதிபதி மாளிகை கட்டியது வரை இத்தகைய விடயங்கள்தான் அரங்கேறி உள்ளன.

முதலில் அத்தகைய அடாவடித்தனத்துக்கு - அத்துமீறலுக்கு - இப்பிரதேச மக்களிடம் தலைசாய்த்து மன்னிப்பு கோரும் நிலைப்பாட்டை அரசு பிரதிபலிக்க வேண்டும். அதனை வெளிப்படையாகக் கூற வேண்டும். அதைச் செய்யாமல் திமிர்த்தனத்தோடு - வழமையான பேரினவாத மேலாண்மை மமதையோடு - இந்த விடயத்தை ஆளும் தரப்பும் அமைச்சர்களும் அணுக முற்பட்டால், இணக்கமான தீர்வுக்கு வாய்ப்பே இல்லை என்பதுதான் நிலைமை. தவறுக்கு வருந்தித் தீர்வு காண்பதுதான் சரியானதாக இருக்கும். இறுமாப்போடு தமது முடிவைத் தமிழர் மீது செலுத்துவதன் வாயிலாக தீர்வு காணலாம் என்று நினைத்தால் அது ஒரு போதும் நடக்காது.




# மன்னார் சுகாதாரப் பணிப்பாளருக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள்

(கி.வசந்தன்)

மன்னார் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் வினோதனின் அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக 30 இற்கும் மேற்பட்டவர்கள் முறைப்பாடு செய்துள்ளார்கள். அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என புனர்வாழ்வு அளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் நாயகம் கந்தசாமி இன்பராசா தெரிவித்துள்ளார்.

வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெரு பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் த.வினோதனின் பழிவாங்கல், அதிகாரத் துஷ்பிரயோகம், பக்கசார்பு, முறைகேடு என்பன தொடர்பாக சில விடயங்களை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்துகின்றோம்.

அவர் 2019ஆம் ஆண்டு முதல் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளராகப் பணியாற்றி வருகிறார். இடையில் சில மாதம் கிளிநொச்சியில பணியாற்றியவர். இதன்போது மன்னாரில் சிங்கள வைத்தியர் ஒருவர் பொறுப்பாக செயற்பட்டார். இடமாற்றம் செய்த பின்பும் பழிவாக்கும் செயற்பாடுகளை செய்தவர். மன்னார் வைத்தியசாலை தொடர்பாக முகநூலுலில் பல கருத்துக்களை போட்டு மீளவும் மன்னார் வந்தார். தனக்கு பிடிக்காத உத்தியோகத்தர்கள் மீது பழிவாங்கும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றார்.

13 வருடங்களாக மனனாரில் பணியாற்றும் பிரியந்தன் என்பவருக்கு இடமாற்றம் வந்தும் அவருக்கு இடமாற்றம் கொடுக்காது அவரை வைத்து சில வேலைகளைச் செய்து வருகின்றார். இடமாற்றங்கள், இடமாற்ற மேன் முறையீடுகள், வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளரால் வழங்கப்படும் இடமாற்றங்களை கூட சில உத்தியோகத்தர்களுக்கு வழங்காது தடுத்து வருகின்றார். சில விடயங்களில் அவர் பக்கச்சார்பாகச் செயற்பட்டு வருகின்றார். பலருக்கு சம்பளங்களை நிறுத்தி வைத்து பழிவாங்கியதற்கான ஆதாரங்கள் உள்ளன.

சில உத்தியோகத்தர்களை பழிவாங்கி வருகின்றார். நிர்வாக உத்தியோகத்தர் பதவியை தனக்குப் பிடித்த ஒருவருக்கு கொடுத்து விட்டு செயற்பட்டு வருகின்றார். கிழக்கு மாகாணத்தில் இருந்து மன்னாரில் வந்து பணியாற்றும் குடும்ப நல உத்தியோகத்தர் ஒருவருக்கு மாகாணத்தால் இடமாற்றம் வழங்க அனுமதி வந்தும் அந்த கடிதத்தை கூட காட்டாமல் வைத்திருக்கிறார். கடிதம் தனிப்பட்ட ரீதியில் குறித்த குடும்ப நல உத்தியோகத்தருக்கு கிடைத்ததும் பணிப்பாளர் வினோதனிடம்கேட்டபோதுதரக்குறைவாககதைத்துள்ளார். அந்த விடயம் கடிதம் மூலம் மாகாணத்திற்கு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதிகார துஷ்பிரயோகம் செய்து வருகின்றார். இவை தொடர்பாக அனைவருக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளோம்.

இவர் தொடர்பாக 30 இற்கும் மேற்பட்டவர்கள் முறைப்பாடு செய்துள்ளார்கள். அவர்கள் கையொப்பம் வைத்தும் கடிதம் தந்துள்ளார்கள்.

இந்த விடயம் தொடர்பாக அனைத்து பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் தீர்வு வரவில்லை. பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் 10 பேர் உண்ணாவிரதம் இருக்கப் போகின்றார்கள் எனக் கூறுகின்றார்கள். ஆனால் உண்ணாவிரதம் இருக்க வேண்டாம், வடிவாகச் சாப்பிட்டு விட்டு பணிப்பாளர் வினோதனை மாற்றும் வரை ஆர்ப்பாட்டம் செய்யுங்கள் எனக் கூறியுள்ளேன். மாகாணப் பணிப்பாளர், ஆளுநர், சுகாதார அமைச்சு வரும் வரை அந்த ஆர்ப்பாட்டம் நடக்க வேண்டும் எனக் கூறியுள்ளேன்.

தென்பகுதியில் உள்ள பல அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்துள்ள அரசாங்கம் வடக்கு, கிழக்கு பகுதியில் உள்ள ஊழல் அரசியல்வாதிகள், அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் முறைகேடுகளில் ஈடுபடும் அரச அதிகாரிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை ஒன்லைன் ஊடாக பெற நடவடிக்கை

ஜனாதிபதி நிதியத்தால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அனைத்து சேவைகளையும்ஒன்லைன்ஊடாக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நிதியத்தின் மருத்துவ உதவிகளை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் கடந்த பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டம் மிகவும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருவதால் ஜனாதிபதி நிதியத்தின் ஏனைய சேவைகளையும் இவ்வாறு விரிவுபடுத்த அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வறுமை ஒழிப்பு நிவாரணங்கள், புலமைப்பரிசில் வழங்குதல், விசேட தேவையுடையோருக்கு வழங்கப்படும் நிவாரணங்கள், விபத்துகள் மற்றும் அனர்த்தங்களின் போது வழங்கப்படும் நிவாரணங்கள் உள்ளிட்ட ஜனாதிபதி நிதியத்தினால் செயற்படுத்தப்படும் அனைத்து சேவைகளையும் பிரதேச செயலகங்களின் ஊடாக ஒன்லைனில் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளமுடியும்.

இதற்கமைய கொழும்புக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த ஜனாதிபதி நிதியத்தின் அனைத்து சேவைகளையும் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் வழங்குவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன், அதிகமான மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.










# வலி. வடக்கில் 2,400 ஏக்கர் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி தொடர் போராட்டம்

## நேற்றுத் தொடக்கம் மயிலிட்டிச் சந்தியில்

வலிகாமம் வடக்கிலுள்ள 2,400 ஏக்கர் காணிகளை விடுவிக்கக்கோரித் தொடர் போராட்டம் ஒன்று நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இருந்து வருகின்ற காணிகளை விடுவிக்க கோரி, மயிலிட்டிச் சந்தியில் பதாதைகளைத் தாங்கியவாறு சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்கள் இந்தப் போராட்டத்தை அமைதி வழியில முன்னெடுத்து வருகின்றனர்.

மக்களின் விவசாய நிலங்கள், குடியிருப்பு நிலங்கள் மற்றும் தொழில் நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு காணிகள் யுத்தம் காரணமாக கடந்த 30 வருடங்களுக்கு மேலாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து வருகின்றன. ஆனால் யுத்தம் நிறைவிற்கு வந்த பின்னராக ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு ஆட்சியாளர்களும் மக்கள் காணிகளை படிப்படியாக சிறிய சிறிய துண்டுகளாக விடுவித்தனர்.

இருப்பினும் விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் சுயமாக தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியாத நிலையில் 2,400 ஏக்கர் காணிகளையும் முழுமையாக விடுவிப்பதே தமது வாழ்வியலை முன்னெடுக்க முடியும் என்ற நோக்கில் இந்தப் போராட்டம் அவர்களால் முன்னெடுக்கப்படுகிறது.












# மலையக மக்களின் காணிப் பிரச்சினைக்காக யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் களத்தில்

மலையக மக்களின் காணிப் பிரச்சினை இன்னும் ஒரு கொள்கை ரீதியில் தேசிய வேலைத் திட்டத்துடன் முன்னெடுக்கப்படாத நிலையில், தற்போது அதற்கான அழுத்தங்கள் பாரியளவில் எழுந்திருப்பது முக்கியமான விடயமாகும். நீண்ட காலமாக மக்களின் தேவையாகவும் மக்களின் நிலம் சார்ந்த இருப்பியலை தக்க வைத்து கொள்வதற்கு இவ்விடயத்தில் முன்னெடுப்புக்களை மேற்கொள்ள யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் இனிமேல் சிறிதும் பின் நிற்காது, முற்றுமுழுதாக ஆதரவளிக்கும் என மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இதனைக் குறிப்பிட்டனர்.

அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மலையக மக்களின் அடிப்படை உரிமைகளில் காணி உரிமையும் முக்கியமான தொன்றாக இருக்கின்றது. நீண்ட காலமாகவே நிலத்திற்கான உரிமையற்ற ஒரு சமூகமாக மலையக மக்கள் இருப்பதோடு எங்கள் உறவுகளின் தலைமுறைக்கே நில உரிமை என்பது மறுக்கப்பட்ட இருளாகவே காணப்படுகின்றது. அதற்கான வெளிச்சம் இதுவரையிலும் எட்டப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மை. மனிதர்கள் காலடி படாத காடுகளை அழித்து, அதில் பெருந்தோட்டங்களை உருவாக்கி, இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு உழைப்பை வழங்கிய மலையக மக்களின் வழித்தோன்றல்களுக்கு அடிப்படையான காணி உரிமை என்பது மறுக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. உண்மையிலேயே இது நீதியானதா? இதற்கான நீதியை நிலைநாட்ட அரசாங்கங்களும் பெருந்தோட்ட கம்பனிகளும் அதற்கான முற்றுமுழுதான முனைப்போடு தொழிற்சங்கங்களும் முன்வருவதில்லை என்பது கேள்விக்குறியான விடயமாகும்.

மக்கள் அவர்களுக்கான காணி உரிமையை பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு போராட்டங்களை அன்று தொட்டு இன்று வரை மேற்கொண்டுதான் வருகிறார்கள். ஆனாலும் இன்று வரை தீர்வு காண முடியாத தன்மையே காணப்படுகின்றது. காணி உரிமைக்கான முதலாவது போராட்டம் 1946ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி கேகாலையின் உருலவள்ளி பெருந்தோட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது. அப்பெருந் தோட்டத்தில் அம்மக்களின் 400 ஏக்கர் குடியிருப்பு நிலம் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமது காணிகளைப் பாதுகாக்க முன்னெடுக்கப்பட்ட போராட்டமாக அது அமைந்திருந்தது. இலங்கைப் பெருந்தோட்டங்களில் உள்ள இந்திய வம்சாவளித் தொழிலாளர்களின் காணி உரிமைகளைக் கோரி இப்போராட்டத்தில் கேகாலை மற்றும் களனிப் பள்ளத்தாக்கு பிரதேசங்களைச் சேர்ந்த 125,000ற்கும் அதிகமான மக்கள் பங்கேற்றிருந்தனர்.

1972ஆம் ஆண்டின் காணிச் சீர்திருத்தச் சட்டம் குடியேற்றங்கள் உருவாகவும் காணிக் கையகப்படுத்தல்கள் நிகழவும் வழிவகுத்தது. தொடர்ச்சியான காணிக் கையகப்படுத்தல்கள் போராட்டங்களுக்கு வழிவகுத்தன. டெவோன் தோட்டத்தின் 7,000 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு எதிராக மே 11, 1977 அன்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது சிவானு லட்சுமணன் என்ற இளம் தோட்டத்தொழிலாளி பொலிஸாரினால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதன் விளைவாக பெருந்தோட்ட நிலங்களை பறிமுதல் செய்யும் திட்டம் கைவிடப்பட்டது. அதே போன்று, 2000 ஆம் ஆண்டில், மேல் கொத்மலை நீர் மின்சார திட்டத்துக்காக அப்பிரதேச மக்களை வெளியேற்றும் முன்னெடுப்பு தொடர்ச்சியான மக்கள் போராட்டம் காரணமாக கைவிடப்பட்டது. 2014ஆம் ஆண்டு பதுளை மாவட்டத்தின் ஹபுத்தளை பிரதேசத்தில் மிரியாபேத்த பகுதியில் இடம்பெற்ற நிலச்சரிவு பேரழிவின் பின்னர், மலைநாட்டில் வாழும் மக்களுக்கு குடியிருப்புக்கு பொருத்தமான இடங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க கோரிக்கை நாட்டின் அனைத்து பாகங்களில் இருந்தும் முன்வைக்கப்பட்டது.

காணி உரிமைகள் மற்றும் ஏனைய உரிமைகளுக்காக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் மேற்கொண்ட தியாகங்கள் அளப்பெரியன. மலையக மக்களின் காணி உரிமைக்கான அங்கீகாரத்தை பாதுகாக்க பல ஆர்ப்பாட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும், அவர்களின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளதுடன் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் மீறல்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. எனவே, இந்தக் கோரிக்கை இலங்கையின் உரையாடலில் உள்ளடக்கப்படும் ஒரு தேவை தற்போது எழுந்துள்ளது.

மேலும் மலையக மக்களுக்கு பெருந்தோட்டக் காணிகளை வழங்குவதற்கு பெருந்தோட்டக் கம்பெனிகளுக்கும் அரச நிறுவனங்களுக்கும் இடையே காணப்படுகின்ற குத்தகை ஒப்பந்தம் காரணமாக காணி உரிமை மறுக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு பெருந்தோட்ட கம்பெனிகளுடன் எவ்வித தொடர்புமற்ற காணி சீர்திருத்த ஆணைக்குழு JEDB, SLSPC, TRI ஆகிய அரச நிறுவனங்கள் மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் கட்டுப்பாட்டில் உள்ள பெருந்தோட்ட காணிகளை அவற்றில் வாழும் மலையக மக்களுக்கு குடியிருப்பு தேவைக்காக அனுமதிப்பத்திரம், அழைப்பு பத்திரம், அளிப்பு பத்திரம் அறுதியீட்டு உறுதி ஊடாக வழங்குவதற்கு இதுவரையில் எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மையாகும்.

மலையக மக்களுக்கு குடியிருப்புக்காக காணி வழங்கப்படும் பொழுது மாத்திரம் மக்களின் உழைப்பால் உருவாக்கப்பட்ட தேயிலைச் செடிகளுக்கும் ரப்பர் மரங்களுக்கும் அம்மக்களை விட அதிக மதிப்பு வழங்கப்பட்டு தேயிலைச் செடிகளையும் ரப்பர் மரங்களையும் காப்பாற்றுவதாக கூறி அவர்கள் தொடர்ந்து லயங்களிலே வாழவைக்கப்படுகின்றனர். மலையக சமூகங்களின் காணி உரிமைகளை உறுதி செய்வதற்காகவும் காணியற்றவர்களுக்காக காணிகளைக் கோருவதற்காக ஒத்த சிந்தனையுள்ளவர்களை ஒன்று திரட்டவும் ஒரு தேசிய தினமாக "காணி தினம்" இருக்கின்றது. இதன் அடிப்படையில் நான்காவது காணி தினத்தினை இன்று (நேற்று) 21 ஆம் திகதி சனிக்கிழமை அட்டன் நகரில் முன்னெடுப்பதற்கு "நிலமற்றோர்க்கு நிலம்" எனும் தொனிப்பொருளில் "மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம்" ஏற்பாடுகளை செய்து வருவதாக அறியப்படுகிறது.

மலையக மக்களின் காணிஒ பிரச்சினை இன்னும் ஒரு கொள்கை ரீதியில் தேசிய வேலைத் திட்டத்துடன் முன்னெடுக்கப்படாத நிலையில், தற்போது அதற்கான அழுத்தங்கள் பாரியளவில் எழுந்திருப்பது முக்கியமான விடயமாகும். நீண்ட காலமாக மக்களின் தேவையாகவும் மக்களின் நிலம் சார்ந்த இருப்பியலைத் தக்க வைத்து கொள்வதற்கு இவ்விடயத்தில் முன்னெடுப்புக்களை மேற்கொள்ள யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் இனிமேல் சிறிதும் பின் நிற்காது, முற்றுமுழுதாக ஆதரவளிக்கும் என்று தெரிவித்துக் கொள்கின்றோம். - என்றனர்.



# ஆயிரத்திற்கு மேற்பட்டோரின் பங்கேற்புடன் யாழில் சர்வதேச யோகா தின சிறப்பு நிகழ்வு

பதினோராவது சர்வதேச யோகா தின சிறப்பு நிகழ்வு நேற்றையதினம் ஆயிரத்திற்கு மேற்பட்டோரின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் காலை 7:30 முதல் 8:30 மணி வரை யோகா நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் இந்திய துணைத் தூதர் சாய் முரளி, வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன், யாழ் மாநகர முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ் மாநகர சபை ஆணையாளர் எஸ்.கிருஷ்ணேந்திரன், இந்திய தூதரக உயர் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.









# சூரிய சக்தி ஆற்றலை ஊக்குவிக்காத அரசாங்கம் எரிசக்தி மாபியாவையே முன்கொண்டு செல்கிறது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ காட்டம்




தற்போதைய மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவித்து, தற்போதுள்ள எரிபொருள் மாபியாவை மாற்றியமைத்து முறைமையில் மாற்றத்தைக் கொண்டு வருவோம் என்று உறுதியளித்திருந்தது. இருந்த போதிலும் இன்று, அந்த முறைமையில் மாற்றம் வார்த்தைகளுக்குள் மட்டும் கட்டுண்டு, எரிபொருள் ஆற்றல் மாபியாவை ஊக்குவிக்கும் நிலைக்கு அரசாங்கம் வந்துள்ளது – என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று விசேட அறிவிப்பை விடுத்து தெரிவித்தார்.

கூரைகளின் மீது பொருத்தப்படும் சூரிய மின் தகடுகளுக்கான கட்டணம் ஒரு கிலோவாட் மணிக்கு ரூ.37 இல் இருந்து ரூ.20 ஆக 45 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இது சூரிய சக்தியை ஊக்குவிக்கும் நடவடிக்கை அல்ல. புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களை நோக்கித் திரும்பும் பலரை அதனை விட்டும் விரட்டியடிக்கும் நடவடிக்கையாக அமைந்து காணப்படுகிறது. அவ்வாறே இது எரிபொருள் ஆற்றல் மாபியாவை மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கையாகவும் அமைந்து காணப்படுகின்றது

அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை ஏராளமான சிறிய மட்ட தொழில் முயற்சியாளர்கள் மற்றும் சூரிய ஆற்றல் தொழில்முனைவோருக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. 1,000 தொழில் நடவடிக்கைகளில் பணிபுரியும் 40,000க்கும் மேற்பட்ட மக்களை இந்த சூரிய சக்தி பேனல் கட்டணம் 45 வீதக் குறைப்பு மோசமாகப் பாதித்துள்ளது. அவர்களின் தொழில்களும் கேள்விக்குறியாக மாறிவிட்டன. முழுத் துறையும் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன. – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நமது நாடு எரிசக்தி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள தருணத்தில், 2024 ஆம் ஆண்டளவாகும் போது சூரிய மின்சக்தித் மூலம் நமது எரிசக்தி கட்டமைப்பிற்கு 500 மெகா வாட் பங்களிப்பு வழங்கப்பட்டன. 70 வீத புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறுவதே அரசாங்கத்தின் அவா என்றாலும், தற்போதைய அரசாங்கம் சூரிய ஆற்றலையும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியையும் அழித்து, எரிபொருள்கள் மீதமைந்த எரிசக்தி மாபியாவை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இது முறைமையில் ஏற்படும் அல்லது ஏற்படுத்தப்பட்ட மாற்றமா? இல்லை. மாறாக தற்போதுள்ள எரிபொருள் மற்றும் எரிசக்தி மாபியாவை அவ்வாறே தொடரும் நடவடிக்கை.

சூரிய சக்தி நாட்டிற்கு 20 ஆண்டுகளுக்கு நிதி நிலைத்தன்மையை பெற்றுத் தருகிறது. நீண்டகால சேமிப்பையும் கொண்டு வருகிறது. இது சுற்றுச்சூழலுக்கு உகந்த துறையாகவும் காணப்படுகின்றது. எரிபொருளை பயன்படுத்தும் போது நிதி நிலைத்தன்மையை கொண்டு வராது. சுற்றுச்சூழலுக்கும் அது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

இயற்கை எரிவாயுவின் விலையும் கணிசமாக அதிகரித்துள்ளது. அனல் மின் நிலையம் மற்றும் எரிபொருள் ஆற்றல்கள் மீது நாடு தங்கியிருக்குமானால் டொலர் செலவையும் எதிர்கொள்ளும். சூரிய சக்தி பயன்பாட்டால் உள்நாட்டு செலவு மட்டுமே காணப்படும்.

உலக சந்தைகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் ரூபாவின் பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சி போன்ற பிரச்சினைகளுக்கு சூரிய சக்தி ஒரு சிறந்த மாற்று ஆற்றல் மூலமாகும். இது நாட்டிலிருந்து அந்நியச் செலாவணி வெளியேறுவதையும் குறைக்கும். எனவே தயவுசெய்து இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுங்கள். எரிபொருள் மாபியாவுக்கு இடமளியாது புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுங்கள். நட்பு வட்டார எரிபொருள் மற்றும் மின்சார மாபியாக்களுக்கு இந்த அரசாங்கமும் அடிமையாகி விட்டது. மக்களின் எரிசக்தி உரிமைகக்காக எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி என்றும் முன்நிற்கும். என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.

# மீன் விலை கணிசமாக அதிகரிப்பு



(உடப்பு-க.மகாதேவன்)

நிலவும் மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து மீன்களின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேலியகொட மீன் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஜயசிறி விக்ரமாராய்ச்சி இதனைத் தெரிவித்துள்ளார். இதன்படி, ஒரு கிலோகிராம் தலபத் மீன் 2,200 ரூபா மொத்த விலைக்கும், ஒரு கிலோகிராம் கொப்பரா தலபத் 2,500 ரூபா மொத்த விலைக்கும் விற்பனை செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், சூரை மீன் ஒரு கிலோகிராம் மொத்த விலைக்கு 1,500 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாக பேலியகொட மீன் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஜயசிறி விக்ரமாராய்ச்சி மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், முட்டை மற்றும் கோழி இறைச்சி என்பன தேவையான அளவு கையிருப்பில் உள்ளதாக விலங்கு உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.



# வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பில் யாழில் மூன்று இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வாள் வெட்டு வன்முறைச் சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள் நேற்றையதினம் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டக் குற்றத்தடுப்பு பிரிவால் மேற்கொள்ளப்பட்ட கைது நடவடிக்கையின்போது மூன்று கூரிய வாள்களும் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டன.

உதயபுரம் பகுதியில் சில வாரங்களுக்கு முன்பு சகோதரர்கள் மீது இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவம் தொடர்பான விசாரணைகளின்போது கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அரியாலை, நாயான்மார்கட்டைச் சேர்ந்த25,28,30வயதுடையமூவரேஇவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# தெரிவுசெய்யப்பட்ட கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம்




நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 1,000 கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதல் கட்டமாக 55 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது.

இதற்காக 14 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சுற்றறிக்கைகள் தொடர்பில் விசாரணை

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் கடந்த சில வருடங்களில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் தொடர்பில் முறையான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா அதிகாரிகளுக்கு ஆலோசனை விடுத்துள்ளார்.





வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தற்போதைய தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் குழுவிற்கு பிரதியமைச்சர் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

கடந்தஆட்சிகாலத்தின்போதுவெளியிடப்பட்ட மற்றும் பாரிய நிதி மோசடிகளுக்கு வழிவகுத்த சுற்றறிக்கைகள் தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு இரத்துச் செய்யப்பட்ட சுற்றறிக்கைகளை அடையாளம்கண்டு அவற்றின் சட்டபூர்வ தன்மை தொடர்பில் ஆராயுமாறு பிரதியமைச்சர் அதிகாரிகளை கோரியுள்ளார்.

உரிய அனுமதிகளுடன் குறித்த சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளனவா என்பதை ஆராய்ந்து பொறுப்புகூற வேண்டிய அதிகாரிகளை கண்டறியுமாறும் பிரதியமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

14 நாள்களுக்குள் விசாரணைகளை நிறைவு செய்து பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கையொன்றை சமர்பிக்குமாறும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசாரணை அதிகாரிகள் குழுவிடம் பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.




# 'அணையா விளக்கு' போராட்டத்தில் தமிழர் தேசமாக அணி திரள அழைப்பு

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுப்பு

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் நடைபெறவுள்ள "அணையா விளக்கு" போராட்டத்திற்கு தமிழர் தேசமாக அனைவரும் அணி திரள வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்குச் சர்வதேச நீதி கோரியும், சர்வதேசக் கண்காணிப்புடன் மனிதப் புதைகுழி அகழ்வை மேற்கொள்ளுமாறு

வலியுறுத்தியும் 'மக்கள் செயல்' என்கின்ற தன்னார்வ இளையோர் அமைப்பால் எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரையில் செம்மணி வளைவுப் பகுதியில் 'அணையா விளக்கு' என்ற பெயருடன் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டம் தொடர்பாக கருத்து தெரிவித்த போதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் லகிதர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – சிவில் சமூக அமைப்புகள் இணைந்து "அணையா விளக்கு" என்ற போராட்டத்தை மனித புதைகுழிக்கு சர்வதேச நீதி வேண்டி முன்னெடுக்கவுள்ளதாக அறிய முடிகிறது. நாங்கள் ஒரு பங்காளராக பங்கேற்று முற்றுமுழுதாக வடக்கு கிழக்கில் மிகப்பெரிய அழைப்பை முன்னெடுக்கின்றோம். எமது உறவுகளுக்காக உயிரிழந்த உறவுகளுக்காகவும் இழைக்கப்பட்ட அநீதிக்காகவும் தமிழ்த் தேசமாக திரண்டு போராட்டத்தில் ஒன்றுசேர வேண்டும்.

இலங்கைக்கு தற்போது வருகை தரவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்ய உள்ளதாக அறிய முடிகிறது. மிக முக்கியமாக செம்மணி சித்துபாத்தி இந்து மயானத்தை மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள பகுதியை மனிதப் புதைகுழியாக அறிவிக்க வேண்டும். தொடர்ச்சியாக சர்வதேச நியமங்களுக்கு உட்பட்டு சர்வதேசத்தின் முற்றுமுழுதான தலையீட்டுடன் அகழ்வாய்ந்த் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

செப்டம்பர் மாதத்தில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தில் ஈழத் தமிழர்களுடைய பிரச்சினையை திசை திருப்பவே மனித உரிமைகள் ஆணையாளரை இலங்கை அரசாங்கம் அழைத்துள்ளது. வடக்கு – கிழக்கு தமிழர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி எங்கள் பிரச்சினைகளையும் மனித புதைகுழிகள் தொடர்ச்சியாக தோண்டப்படும் விடயங்களையும் வெளிப்படுத்த வேண்டும் – என்றார்.

# செம்மணி 'அணையா விளக்கு' போராட்டத்துக்கு 'இயற்கையின் நண்பர்கள் இயக்கம்' முழு ஆதரவு

செம்மணியில் நடைபெறவுள்ள "அணையா விளக்கு" போராட்டத்துக்கு "இயற்கையின் நண்பர்கள் இயக்கம்" ஆதரவு தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:–

செம்மணி மனிதப்புதைகுழி என்பது இலங்கைத்தீவின் கறுப்புப் பக்கங்களில் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. செல்வி கிருசாந்தி வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டமையை அம்பலமாகி, செம்மணி மிகமுக்கியமான இடமாக அடையாளப்படுத்தப்பட்டது மட்டுமல்லாது, கடந்த 2006 முதல் 2009 வரை அங்கு பல வன்செயல்கள் நிகழ்ந்திருக்கக்கூடும் என்று சந்தேகிக்கும் அளவிற்கு செம்மணி குறித்த பார்வை தமிழ் மக்களிடம் உண்டு.

உண்மையை கண்டறியவும், குற்றவாளிகளை கண்டறியவும் செம்மணி சுடுகாட்டை அண்டி அடையாளம் காணப்பட்ட மனிதப்புதைகுழிகள் அனைத்தும் தோண்டப்பட்டு அந்த எலும்பு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு காபன் பரிசோதனையும், குற்றவியல் விசாரணையும் செய்யப்படல் வேண்டும்.

கைக்குழந்தைகள் மற்றும் சிறுவர்கள், தாய்மார்கள், அப்பாக்கள், சகோதரங்கள் என பலரும் கொன்று புதைக்கப்பட்டிருக்கிறார்கள்.

15-20 ஆண்டுகளுக்குமுன் அந்த வீதியில் திரிந்தவர்களாயிருக்கலாம், எங்களோடு பேசியவர்களாக இருக்கலாம். அவர்கள் மனித சமூகமே வெட்கி தலைகுனியும் வகையில் பூவாகவும், பிஞ்சாகவும் கொன்று புதைக்கப்பட்டு இருப்பது அதிர்ச்சி அளிக்கின்றது.

பாதிக்கப்பட்ட மக்கள் அமைதியான அல்லது மௌனமான முறையில் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான காரணம் எங்களிடம் வார்த்தைகளோ, கோசங்களோ இல்லை என்பதல்ல பொருள். இந்தத் தீவிலே எங்களுக்கான நீதி கடந்த நூற்றாண்டிலிருந்து மறுக்கப்பட்டு மௌனமாக்கப்பட்டிருக்கிறது.

செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரியும். சர்வதேசக் கண்காணிப்புடனான மனிதப் புதைகுழி அகழ்வை வலியுறுத்தியும் மக்கள் செயல் என்கிற தன்னார்வ இளயோர் அமைப்பினால் தமிழர்களது பண்பாட்டில் நம்பிக்கை சார்ந்த மரபாக இருக்கின்ற அணையா விளக்கினை முன்னிலைப்படுத்தியே வடிவமைக்கப்பட்டுள்ளது.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க எதிர்வரும் 23, 24, 25 ஆகிய நாள்களில் குரல்கள் நசுக்கப்பட்டு, கை, கால்கள் கட்டப்பட்டு, கொன்று புதைக்கப்பட்ட எமது சக தமிழர்களின் நீதிக்காக ஒன்று கூடும்படி அனைவரிடமும் கேட்கிறோம். தமிழர்களை ஒன்றாக இணைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த கவனவீர்ப்பு போராட்டத்துக்கு இயற்கையின் நண்பர்கள் இயக்கம் தனது ஆதரவை தெரிவித்துக்கொள்கின்றது.

# ஈரானில் இருந்து இலங்கையர்களை வெளியேற்றுவதற்கு இந்தியா முடிவு



நேபாளம் மற்றும் இலங்கை அரசாங்கங்களின் வேண்டுகோளின் பேரில் அந்நாடுகளின் குடிமக்களை ஈரானில் இருந்து வெளியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதை அடுத்து, ஈரானும் பதில் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதனால், ஈரானில் உள்ள வெளிநாட்டவர்கள் அந்நாட்டைவிட்டு வெளியேறி வருகிறார்கள்.

ஈரானில் உள்ள இந்தியர்களை அழைத்து வர ஒபரேஷன் சிந்து என்ற பெயரில் மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஈரானில் உள்ள இந்திய மாணவர்கள் மற்றும் மத யாத்ரீகர்கள் உட்பட 290 இந்தியர்கள் ஈரானில் இருந்து ஒரு தனி விமானம் மூலம் நேற்று முன்தினம் புதுடில்லிக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதன் தொடர்ச்சியாக, துர்க்மெனிஸ்தானின் அஷ்காபாத்தில் இருந்து நேற்று அதிகாலை 3 மணிக்கு சிறப்பு விமானத்தில் இந்தியர்கள் புதுடில்லி அழைத்து வரப்பட்டனர். இதன் மூலம், இதுவரை 517 இந்தியர்கள் “ஒபரேஷன் சிந்து” மூலம் தாயகம் திரும்பியுள்ளனர்.

இந்நிலையில், ஈரானில் உள்ள நேபாளம் மற்றும் இலங்கை குடிமக்களை வெளியேற்ற முயற்சி மேற்கொள்ளப்படும் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஈரானில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

“நேபாளம் மற்றும் இலங்கை அரசாங்கங்களின் வேண்டுகோளின் பேரில், ஈரானில் உள்ள இந்திய தூதரகம், அந்த நாடுகளைச் சேர்ந்தவர்களையும் வெளியேற்ற முயற்சிகளை மேற்கொள்ளும்.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஈரானில் உள்ள நேபாளம் மற்றம் இலங்கை நாட்டவர்கள் இந்திய தூதரகத்தைத் தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்து, தொலைபேசி எண்களையும் இந்திய தூதரகம் வெளியிட்டுள்ளது.



## இஸ்ரேல் – ஈரான் போர்:

# தமிழர்களுக்குத் தேவைப்படும் உதவிகளை செய்ய அரசு தயார்

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

இஸ்ரேல் – ஈரான் இடையே தற்போது ஏற்பட்டுள்ள போர் காரணமாக அந்நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உடனடியாக அவர்களுக்கு தேவைப்படும் அனைத்து உதவிகளையும் வழங்க தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்.

இது குறித்து வெளியிட்டுள்ள அரசு செய்திக் குறிப்பில்,

“தமிழக முதல்வர் ஸ்டாலின் இஸ்ரேல் – ஈரான் இடையே தற்பொழுது ஏற்பட்டுள்ள போர் காரணமாக அந்நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையை அங்குள்ள தமிழர்களின் விவரங்களைப் பெற்று உடனடியாக அவர்களுக்கு தேவைப்படும் அனைத்து உதவிகளையும் வழங்கிட முதல்வர் ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்

இந்தச் சூழலில் ஈரானிலிருந்து இந்திய வெளியுறவுத்துறை மூலமாக இந்தியர்கள் தாயகம் திரும்பத் தொடங்கியுள்ளனர். இவர்களில் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களை கண்டுபிடித்து தமிழ்நாட்டுக்கு பாதுகாப்பாக அழைத்து வரும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. மேலும், அங்குள்ள நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, தமிழர்களுக்கு தேவைப்படும் உதவிகளை செய்ய தமிழ்நாடு அரசு தயார் நிலையில் உள்ளது.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



## முருக பக்தர்கள் மாநாடு:

# மதுரையில் குவியும் பக்தர்கள் 1,500 பொலிஸார் கடமையில்





இந்து முன்னணி சார்பில் மதுரையில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் முருக பக்தர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்து வருகின்றனர்.

மதுரை வண்டியூர் சுங்கச்சாவடி அருகே நடைபெறும் இந்த மாநாட்டையொட்டி அமைக்கப்பட்டுள்ள அறுபடை வீடுகளின் மாதிரி கோயில்களை ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்து வருகின்றனர். சனிக்கிழமை காலை ஆளுநர் ஆர்.என்.ரவி, த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் மற்றும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

இன்று மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெற உள்ள மாநாட்டில் பங்கேற்கும் பக்தர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் கந்த சஷ்டி கவசம் பாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், ஆந்திர மாநில துணை முதல்வர் பவன் கல்யாண், இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம், பா.ஜ.க. மாநில் தலைவர் நயினார் நாகேந்திரன், மூத்த தலைவர் ஹெச்.ராஜா மற்றும் மடாதிபதிகள், தமிழகம் மட்டுமின்றி பிற மாநிலங்களை சேர்ந்த பா.ஜ.க. பிரமுகர்கள் கலந்துகொள்கின்றனர்.

இந்த மாநாட்டுக்கு தமிழகம் முழுவதிலும் இருந்து 5 லட்சம் பேர் செல்வார்கள் என எதிர்பார்ப்பதாக மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். வெளி மாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து 5,000 இற்கும் மேற்பட்டோர் செல்லவுள்ளனர்.

பல்வேறு மாவட்டங்களில் இருந்து இந்து முன்னணி அமைப்பினர், பா.ஜ.கவினர், ஆன்மிக அமைப்பினர் சனிக்கிழமை மாலையிலேயே வாகனங்களில் மதுரைக்கு செல்லத் தொடங்கிவிட்டனர். இதையொட்டி பல்வேறு ஏற்பாடுகள், வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மாநகர பொலிஸ் ஆணையர் லோக நாதன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் ஆகியோர் தலைமையில் 1,500 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மாநாட்டின் திடலில் முருகனின் அறுபடை வீடுகளின் மாதிரிகள் அமைக்கப்பட்டுள்ளன. மாநாட்டு மேடையின் பின் பகுதியில் திருப்பரங்குன்றம் மலையை பிரதிபலிக்கும் வகையில் பிரமாண்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மாநாட்டுத் திடலைச் சுற்றிலும் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. மாநாட்டுத் திடலில் இருந்து குறிப்பிட்ட தூரத்துக்கு இந்து முன்னணி கொடிகளும், தோரணங்களும் கட்டி அலங்கரிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து முருகன் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

வெளி மாநிலங்களில் இருந்து வரும் வாகனங்களுக்கு வழித்தடங்கள் குறித்து வழிகாட்டுவதற்கு பொலிஸ் நிலையம் வாரியாக வழிக்கறிஞர்கள், தன்னார்வலர்கள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாகனங்களை நிறுத்த பார்க்கிங் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை கவனிக்க சிறப்புக் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்த மாநாடு தொடங்கும் முன்பு கந்த சஷ்டி, முருகன் பாடல்களை ஒலிக்கும் விதமாக ஆன்மிக கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்துள்ளனர். இந்த மாநாட்டில் முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப் படவுள்ளன.

# ஈரான் இராணுவத்தின் ட்ரோன் படைப்பிரிவின் முக்கிய தளபதி கொலை; இஸ்ரேல் அறிவிப்பு



ஈரானின்புரட்சிகரகாவல்படைட்ரோன் படைப் பிரிவின் முக்கிய தளபதி கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

இஸ்ரேலை நோக்கி நூற்றுக்கணக்கான ஆளில்லா ட்ரோன்களை ஏவுவதில் முக்கிய பங்கு வகித்த இந்த தளபதியை கொல்ல இஸ்ரேலிய இராணுவம் போர் விமானங்களைப் பயன்படுத்தின.

இஸ்ரேல் இராணுவத்தின் அறிக்கையின்படி, 'ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் மூத்த தளபதி கொல்லப்பட்டுள்ளார். அவரது பெயர் அமின் பௌர் ஜோட்கி. புரட்சிகர காவல்படையின் இரண்டாவது யு.ஏ.வி. ட்ரோன் படைப்பிரிவின் கொமாண்ட் தளபதியாக அவர் பதவி வகித்தார்' எனத் தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேல் – ஈரான் போர் தொடங்கிய ஒன்பது நாட்களில் இஸ்ரேலால் கொல்லப்பட்ட 7 ஆவது உயர்மட்ட ஈரானிய தளபதி இவர் ஆவார்.

ஈரானின் ட்ரோன்கள், இந்த மோதலில் ஒரு முக்கிய பகுதியாக உள்ளது. அவை இஸ்ரேலின் பல பகுதிகளில் கடுமையான சேதத்தை உருவாக்கியுள்ளன. ஈரானின் ட்ரோன்களை கண்டறிந்து, கண்காணிக்கவும் மற்றும் வீழ்த்துவதற்கும் நிறைய ஆயுதங்களையும், இராணுவ வீரர்களையும் இஸ்ரேல் பயன்படுத்தி வருகிறது. தற்போது இரு தரப்பிலும் ஏவுகணைத் தாக்குதல்கள் அதிகரித்து வரும் நிலையில் ஈரான் தளபதி ஒருவர் கொல்லப்பட்டது, அந்த நாட்டுக்கு பெரும் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.

மோதல் தொடங்கியதிலிருந்து இஸ்ரேலிய உளவு சேவைகளுடன் தொடர்பு கொண்டிருந்ததாக 22 பேர் கைது செய்யப்பட்டனர் என ஈரான் ஊடகங்கள் தெரிவித்தன.

"இஸ்ரேலின் சியோனிச ஆட்சியின் உளவு அமைப்புகளுடன் தொடர்புடையவர்கள் மற்றும் இஸ்ரேலின் குற்றவியல் ஆட்சியை ஆதரித்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 22 பேர் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டனர்." என்று ஈரானின் கோம் மாகாணத்தில் உள்ள காவல் உளவுத் துறையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியா - பாக். போரை நிறுத்தியதற்காக எனக்கு அமைதிக்கான நோபல் கிடைக்காது

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு



"இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போரை நிறுத்தியதற்காக எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது. நான் என்ன செய்தாலும் எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது."

– இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ட்ரூத் சமூக வலைதளத்தில் டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்ட பதிவில்,

"கொங்கோ ஜனநாயகக் குடியரசுக்கும், ருவாண்டா குடியரசுக்கும் இடையே, பல தசாப்தங்களாக நடந்து வரும், வன்முறைரத்தக்களரிமற்றும்உயிரிழப்புகளை ஏற்படுத்திய போரில், வெளியுறவுச் செயலாளர் மார்கோ ரூபியோவுடன் சேர்ந்து, ஒரு சிறப்பான ஒப்பந்தத்தை நான் ஏற்பாடு செய்துள்ளேன் என்பதை அறிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

ருவாண்டா மற்றும் கொங்கோவின் பிரதிநிதிகள் திங்கள் கிழமை வொஷிங்டனில் ஆவணங்களில் கையெழுத்திடுவார்கள். இது ஆபிரிக்காவிற்கும், வெளிப்படையாகச் சொன்னால், உலகிற்கும் ஒரு சிறந்த நாள்! இதற்காக எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போரை நிறுத்தியதற்காக எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது. செர்பியாவிற்கும் கொசோவோவிற்கும் இடையிலான போரை நிறுத்தியதற்காக எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது. எகிப்துக்கும் எத்தியோப்பியாவிற்கும் இடையில் அமைதியைப் பேணுவதற்காக எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது. மேலும் மத்திய கிழக்கில் ஆபிரகாம் ஒப்பந்தங்களைச் செய்ததற்காக எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது.

ரஷ்யா – உக்ரைன், இஸ்ரேல் – ஈரான் உட்பட நான் என்ன செய்தாலும், அதற்கான விளைவுகள் என்னவாக இருந்தாலும் எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது. ஆனால் மக்களுக்கு நான் செய்தது தெரியும், எனக்கு அவ்வளவுதான் முக்கியத்துவம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# காசாவில் ஊட்டச்சத்து குறைபாட்டினால் சிகிச்சை பெறும் குழந்தைகள் அதிகரிப்பு



காசாவில் கடந்த மே மாதத்தில் மாத்திரம் ஊட்டச்சத்து குறைபாட்டினால் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி 5,119 குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டின் காரணமாகச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது கடந்த ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் 50 சதவீத அதிகரிப்பாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 22.06.2025

## மேஷம்

சம்பிரதாய விழாக்கள் மற்றும் ஆன்மீக சொற்பொழிவுகளில் கலந்து கொள்வதன் மூலம் ஆறுதல் மற்றும் நிவாரணம் கிடைக்கும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் திருப்தி நிலவும்.

பணியிடத்தில் பதற்றம் காணப்படும். பணியிடத்தில் காணப்படும் கடினமான சூழ்நிலையை கையாள அனுசரணையான போக்கை மேற்கொள்ள வேண்டும். திட்டமிட்டு பணியாற்றுங்கள்.

உங்கள் துணையின் மீது தவறான கருத்து கொண்டிருப்பீர்கள். இது உங்களுடைய உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் நல்லுறவு காண சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்படாமல் தடுக்க நீங்கள் முன்கூட்டியே திட்டமிட வேண்டும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டும்.

## ரிஷபம்

இன்று சற்று கடினமான சூழ்நிலைகள் காணப்படும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை மற்றும் உறுதி அவசியம். உங்கள் அன்றாட நிகழ்வுகளில் விழிப்புணர்வு தேவை.

பணியிடத்தில் மிதமான பலன்கள் காணப்படும். அதிகப் பணிகள் கவலையை அளிக்கும். அதனால் பணிகளைக் கையாளும்போது கவனக்குறைவு ஏற்படும்.

உங்கள் துணையுடன் குடும்பப் பிரச்சினை ஒன்றை சந்திக்க நேரலாம். குடும்பத்தில் அமைதி மற்றும் நல்லிணக்கம் ஏற்பட ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசிக் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

கால் மற்றும் தொடைகளில் வலி ஏற்படலாம்.

## மிதுனம்

இன்று புதிய மனிதர்களுடன் கலந்துறவாடுவீர்கள். புதிய நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ள இது உகந்த நாள். அனுபவப் பூர்வமான பாடம் இதன் மூலம் கற்கலாம்.

உங்கள் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நல்ல பலனை பெற்றுத் தரும். உங்கள் நேர்மையான அணுகுமுறை காரணமாக பணியில் சாதிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை பகிர்ந்து கொள்வீர்கள். அதன் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

பணபுழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் குடும்பத்துடன் வெளியே செல்லுதல் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கடகம்

இன்று சௌகரியங்களை அனுபவிக்கும் நாள். இன்றைய நாள் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும். இன்று மனவலிமை அதிகம் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்களின் செயல் திறன் சக பணியாளர்களை ஆச்சரியப்பட வைக்கும்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். நீங்கள் இருவரும் நல்லுறவையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்றைய நாளை நீங்கள் புதிய முதலீடுகள் செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## சிம்மம்

இன்று கடினமான சூழ் நிலை காணப்படும். அது உங்கள் நாளின் சீரான நிலையை பாதிக்கும். கவனமுடன் செயலாற்ற வேண்டும். தனிமை உணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. அதனை சமாளிக்க வேண்டும். அமைதி பெற பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காணப்படும். நற்பலன்களைக் காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும்.

உங்கள் துணையிடம் கருத்து வேறுபாடு கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் குடும்பத்துக்காகச் சில தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே திட்டமிட்டுப் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்யுங்கள்.

## கன்னி

கடினமான சூழ்நிலைகளை கையாள பொறுமை அவசியம். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் பணிகளை மேற்கொள்ளும்போது கடினமான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர் களுடன் நல்லுறவு பராமரிப்பதிலும் சிக்கல்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் சமநிலை மற்றும் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் தாயின் உடல் நிலையில் பாதிப்பு காணப்படும்.

## துலாம்

இன்று மன வலிமை நிறைந்து காணப்படும். எதிர்பாராத நன்மைகள் திருப்தியை அளிக்கும். விருந்தினர்கள் வருகை காரணமாக இன்று நீங்கள் உற்சாகமாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காணப்படும். பணியிடச் சூழல் இனிமையாகவும் மகிழ்ச்சி கரமாகவும் காணப்படும்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையிடம் உங்கள் அன்பை வெளிப்படுத்துவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் பணவரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று திட ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## விருச்சிகம்

உங்கள் இலக்குகளை அடைய இந்த நாள் அனுகூலமாக இருக்காது. அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் உங்களை வைத்திருப்பது நல்லது. இன்று திறமையாக செயலாற்ற அனுசரணையான அணுகுமுறை தேவை.

பணியில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். இன்று பணியில் கவனம் மிகவும் அவசியம்.

சில கருத்து வேறுபாடு காரணமாக தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவுப் பிணைப்பு சற்று பாதிப்படையும்.

இன்று நிதிநிலைமை அபாரமாக இருக்கும். கூடுதல் செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு அதிருப்தி அளிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.06.2025




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். இன்று அசௌகரியமாக உணர்வீர்கள். பொறுமையாக இருப்பதன் மூலம் நன்மை அடையலாம்.

பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். பணியிடத்தில் உங்கள் திறமைகளை பயன்படுத்த இயலாத நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள இயலாது. எனவே பொறுமை மேற்கொள்ளுங்கள்.பேசுவதைத் தவிர்த்திடுங்கள்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். பண இழப்பு காணப்படுகின்றது. எனவே கவனமாக பணத்தை கையாளவும்.




உங்கள் மனோதிடம் மற்றும் உற்சாகம் காரணமாக இன்று சிறந்த பலன்கள் கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நல்ல பண வரவு காணப்படுகின்றது. உங்கள் கடின உழைப்பு காரணமாக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பண வரவு ஏற்படும்.

உங்களிடம் காணப்படும் மன திருப்தி மற்றும் மகிழ்ச்சி காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று தேவையில்லாமல் வாக்கு வாதத்தில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அமைதியாக இருப்பது நல்லது.

அதிகப் பணிகள் காணப்படும். திறமையாகப் பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காதது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் கடுமையான விவாதங்கள் இருவரிடையே ஏற்படலாம். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பண வரவு எதிர்பார்த்த அளவுக்கு காணப்படாது. தேவையற்ற செலவுகள் எழும். பணத்தை சாதுர்யமாக கையாள்வது கடினமாக இருக்கும்.




புத்திசாலித்தனத்தை சரியான நேரத்தில் பயன்படுத்துவதன் மூலம் இன்று சாதகமான பலன்கள் கிட்டும். உறுதி மற்றும் சிறப்பான திட்டம் மூலம் உங்கள் இலக்குகளை அடைவீர்கள்.

உங்கள் சிறப்பான செயல்திறன் மூலம் பணியில் வெற்றி பெறும் நிலை காணப்படும். உங்கள் பணியின் மூலம் கூடுதல் நற்பலன்கள் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சிறந்த தொடர்பு கொண்டிருப்பீர்கள். இதனால் அன்பும் மகிழ்ச்சியும் பெருகும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சிறப்பாக சேமிக்க இயலும். புதிய முதலீடுகள் லாபகரமாக இருக்கும்.

மன உறுதி காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். கடவுள் ஆசி இன்று உங்கள் பக்கம்.




# சாதாரண தரப் பெறுபேறுகள் தொடர்பில் உண்மைக்குப் புறம்பான செய்திகள்

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் நேற்று நள்ளிரவு சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடவுள்ளதாக சமூக ஊடகங்களில் உலாவிய செய்தி உண்மைக்குப் புறம்பானது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், பரீட்சைகள் திணைக்களமானது நேற்று க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடவில்லை என்றும், சமூக ஊடகங்களில் இதுவரையில் உலா வருகின்ற செய்தி உண்மைக்குப் புறம்பானது என்றும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.